விலை சதம் 25

# காந்தீயம்

**சர்வோதய கருத்தரங்கம்**


1977 மே 21 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9 மணிக்கு வதுளை - சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் சர்வோதய கருத்தரங்கம் நடைபெறும்.

மலர் 14 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் ( காந்தி ஆண்டு 107 ) 1977 ஏப்ரில் — மே | இதழ் 7-8

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க வழி!

## வினோபாஜி கூறுகிறார்

இப்போதைய ஜனநாயக அமைப்பில் சராசரி மனிதர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறார்கள். எனவே அவ்வப்போது ஏற்படும் நெருக்கடிகளுக்கு இவர்களால் தீர்வுகாண முடியாது. ஆகையால் அரசியலுக்கு அப்பாற்பட்டு சிந்திப்பவரும் உள்ளத்தால் உயர்ந்தவர்களான விஞ்ஞானி, ஆத்மஞானிகளின் ஆலோசனைகளை பெற்றுச் செயல்பட்டால்தான் ஜனநாயகம் காப்பாற்றப்படும். பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான சரியான பயிற்சிக் களம் கிராமங்கள் தான். சிறு சிறு பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதன் மூலம், தேசிய அளவில் ஏற்படும் பெரிய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணும் பெரும் ஆற்றலைப் பெறமுடியுமெனவும் கூறி, இக் கண்ணோட்டத்திலேயே கிராமசுயராஜ்யத்தைத் தான் வலியுறுத்துவதாகவும் வினோபாஜி கூறுகிறார்.



இன்றைய அரசியல் சாணக்கியர்களெல்லாம் பத்தாம் பசலியானவர்கள் தான். புதிய யுகத்தைச் சிருஷ்டிப்பவர்களல்ல. எனவே இப்போது இவர்களால் இந்த யுகத்திற்கு என்ன பயன்? ஆனால் இவர்கள் தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து விடுகிறார்கள். தேர்தலில் சராசரியான மனிதர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்தலில் மிகச் சிறந்தவர்கள் தேர்ந்தெடுப்பதற்கான வாய்ப்பே கிடையாது. எனவே யாரோ மிகத்திறமையாக அறிவை வெளிப்படுத்தி சமுதாயத்தை நெருக்கடிகளிலிருந்து விடுவிப்பார் என்பது சாத்தியமல்ல. எந்த அறிவின் காரணமாக இந்த நெருக்கடிநிலை தோன்றியிருக்கிறதோ, அதே அறிவினால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களான பிரதிநிதிகளுக்கு இந்த நெருக்கடிக்குத் தீர்வுகாண்பதற்கான திறமை எவ்வாறு இருக்க முடியும்?

இதற்கு மாறாக அரசியலுக்கு அப்பாற்பட்டுச் சிந்திப்பவரும், நடுநிலை நோக்குடன் பார்ப்பவரும் விளையாட்டிலிருந்து ஒதுங்கியிருந்து விளையாட்டின் தரத்தைக் கணிக்கக்கூடிய அறிவுள்ளவர்களாக இருப்பார்களாயின் ஒருவேளை மக்களாட்சிமுறையில் நடவடிக்கைகளைக் கொண்டு செலுத்துவதற்கு சராசரி நல்லவர்களைத் தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் கடினமான பிரச்சினை தோன்றும்போது இவர்கள் எல்லாரிலிருந்தும் ஒதுங்கியிருக்கும், விஞ்ஞானி, ஆத்மஞானி மற்றும் உள்ளத்தால் உயர்ந்த மனிதர்களிடம் சென்று அவர்களுடைய ஆலோசனைகளைப்பெற்று செயல்பட்டால் ஜனநாயகம் காப்பாற்றப்படும். இல்லாவிட்டால் மக்களாட்சி முறையானது எப்போதுமே தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் திறமையற்றதாகத்தான் இருந்து வரும்.

இன்றைய மக்களாட்சியில் 51 பேருக்கு எதிராக 49 பேர் என்ற முறையில் தேர்தல்கள் நடக்கின்றன. எனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் 51 பேர்களுடைய ஆதரவு தான் கிடைக்கிறது. ஆனால் ஆட்சி என்பது 100 பேர்களின் ஒத்துழைப்புடன் நடத்தவேண்டியிருக்கிறது. இந்த 51 பேர்களில் எல்லாரும் அறிவாளிகளாக இருப்பார்கள் என்பதுமல்ல. அவர்களுக்கு எப்போதுமே மக்களின் ஆற்றல் தேவைப்படுகிறது. எனவே வாக்காளர்கள் கூறுவதற்கிணங்கவே அவர்கள் நடக்க வேண்டியிருக்கிறது. அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னரும் அவர் அவர்களின் தலைவராக இராமல் ஊழியராகிவிடுகிறார். வாக்காளர்களின் கட்டளைகளை தலைமேல் சுமக்கவேண்டியிருக்கிறது." அவர்கள் தலைமேல் கடவுள் இருப்பதில்லை; வாக்காளர்கள் தான் அமர்ந்து கொண்டிருப்பார்கள்.

காந்தியடிகள் நிலை எவ்வாறிருந்தது? என் உள்ளே இருக்கும் ஆண்டவன் கூறுவதற்கிணங்கவே நான் செயல்படுவேன் என்று அவர் கூறினார். பர்தோலி சத்தியாக்கிரகமும், சௌரிசௌராவில் வன்முறையும் நடைபெற்றபோது ஒத்துழையாமைக் கொள்கையை நிறுத்திவிட வேண்டுமென்று அவர் தீர்மானம் நிறைவேற்றினார். அப்போது எல்லாப் பத்திரிகைகளும் அவரைக் குறைகூறின. ஆனால் காந்திஜி உறுதியாக இருந்தார். "என் அந்தராத்மா எனக்கு என்ன கட்டளையிடுகிறதோ அதன்படியே செயல்படுவேன்" என்று அவர் கூறினார். இயக்கத்தை

( 7 ஆம் பக்கம் பார்க்க )

★ வதுளை சர்வோதய கருத்தரங்கச் சிறப்பிதழ் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருக்ஷேத்ரம் முதல் பவனார் வரை

## ஒரு கண்ணோட்டம்

1973 ஏப்ரலில் குருக்ஷேத்ரத்தில் 21 ஆவது சர்வோதய சமாஜ மாநாடு நடைபெற்றது. குருக்ஷேத்ர மாநாடு சிறப்பும் மகிழ்ச்சி மிக்கதாக இருந்ததெனினும் மாநாட்டிற்குப் பிறகு சர்வோதய இயக்கத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் வரலாற்றுச் சிறப்புமிக்கது. அந்த ஆண்டிலேயே சர்வ சேவா சங்க மாநாட்டில் உடனடிப் பிரச்னைகள் மீது நடவடிக்கை எடுத்து ஏதாவது செய்ய வேண்டுமென்ற குரல் எழுப்பப்பட்டது. சர்வ சேவா சங்கத்திற்கு ஆத்யாத்மிக அடிப்படை அளிப்பதற்காக வினோபா அடிகள் தமது பிறந்த நாளான 1973 செப்டம்பர் 11-ம்தேதியன்று உபவாச தானத்தைத் தொடங்கினார், எங்கும் நிறைந்த பிரம்மத்திலிருந்து முன்னேறி தூய்மையான பிரம்மத்தை வழிபடுவதைத் தொடங்கினார். ஒரு பக்கம் ஆத்யாத்மிகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் போதே மற்றொரு பக்கம் சர்வ சேவா சங்கத்தை அரசியலில் ஈடுபடுத்துவதற்கான முயற்சியும் நடைபெற்று வந்தது. எனவே சிறிது சிறிதாகச் சங்கம் வழி மாறிச் செல்லுகிறதென்ற கருத்து சிலர் மனத்தில் எழுந்தது. ஒரு பக்கம் வினோபாஜி நற்சமுதாயத்தை நோக்கியும் முயன்று கொண்டிருக்கும் போது தற்காலிகப் பிரச்னைகள் மீது வினோபாஜியின் கருத்தும் நிலவியது. வினோபாஜியோ மக்கள் சக்தியின் அடிப்படையில் இயக்கத்தை வளர்த்துச் செல்வதற்கான 1 சன்னாதே, 2 உபவாசதானம் 3 எல்லாருடைய ஒப்புதலுடன் தீர்மானிப்பது, 4 ஐந்து ஆற்றல்கள் என்று செய்தியை வினோபாஜி எழுதித் தந்தார்.

சன்னாதே: எனில் பிரம்ம வித்தை (கல்வி) கிராம சுயராஜ்யம், காந்தி சேனை, ஆசாரியகுல் மற்றும் தேவநாகரிஎழுத்தை ஏற்றுக் கொள்வது. உபவாசதானம் என்பது மாதத்தில் ஒரு நாள் உண்ணாநோன்பிருந்து அதன் மூலம் மீதமாகும் பணத்தை சர்வ சேவா சங்கப் பணிகளுக்களிப்பது.

சர்வோதய ஊழியர்கள் சர்வ சம்மதி (எல்லாருடைய ஒப்புதல்) மூலம் பணிகளைச் செய்து வர வேண்டும்.

மக்கள்சக்தி, நல்லோர்சக்தி, அறிவாளிகள் செல்வந்தர்கள் ஆற்றல், அரசின் ஆற்றல் ஒத்துழைப்பு மூலம் நிர்மாணப் பணிகள் செய்யப்படுவது தான் ஐம்பெரும் ஆற்றல்கள்.

உடனடியான பிரச்னைகளுக்குத் தீர்வுகாண இந்த நான்கு அம்ச அணுகு முறை விசேஷ சிறப்புள்ளது. இந்த அணுகு முறையில் சர்வோதயக் சண்ணோக்கும் செயல்முறையும் இணைந்திருந்தன. தீவிரப்பணியின் கண்ணோட்டத்தில், சகர்கா மாவட்டத்தை கிராம சுயராஜ்யத்திற்கான விசேஷ வேலைத் திட்டமாக மேற்கொள்ளப்பட்டு நாடு முழுதுமிருந்து ஊழியர்கள் அதில் ஈடுபட்டார்கள்.

இவ்வளவு வேலை நடந்த பின்னரும் சர்வோதய இயக்கம் எதிர்பார்த்த அளவு நாட்டின் கவனத்தை ஈர்க்கவில்லையென்றும், இயக்கத்தின் அடிப்படையை மாற்றவேண்டும் எனவும் சிலர் கருதினர். அரசியல் பிரச்சினைகளில் ஈடுபாடுகொள்ளாமல் சர்வோதய இயக்கத்தை மக்கள் இயக்கமாக உருவாக்க முடியாது என்ற கருத்து கூட நிலவியது.

குஜராத்திலும், பின்னர் பீகாரிலும் மக்கள் இயக்கம் தொடங்கப்பட்டது. இச்சமயத்தில்தான் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம் ஆகியவற்றுக்கிடையே நட்பு அடிப்படையான சமாதானஒப்பந்தங்கள் ஏற்படாத வரையில் அகிம்சை அடிப்படையிலான இயக்கங்களைக்கூட அரசுக்கெதிராகத் தொடக்கக்கூடாதென்று வினோபாஜி கூறினார்.

1974 ஜூலையில் சர்வசேவா சங்க மாநாடு வர்தாவில் நடைபெற்றது. பீகார் இயக்கத்தில் ஈடுபடுவது, கிராம சுயராஜ்யத்தில் ஈடுபடுவது பற்றி கருத்து வேறுபாடு ஏற்பட்டபோது இரண்டும் கங்கை—பிரம்மபுத்திரா நதிகள் என்று குறிப்பிட்டு தங்கள் விருப்பம்போல் சர்வோதய ஊழியர்கள் ஈடுபடலாம் என்றும், ஆனால் அதேசமயத்தில்ஒருசாரார் பணியை மற்றவர் மதிக்கவேண்டும் என்றும், எக்காரணத்தைக் கொண்டும் சர்வோதய குடும்பத்தினரிடையே அன்பும், உள்ள ஒருமைப்பாடும் பாதிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றும் வினோபாஜி சமரசத் திட்டத்தை சங்கத்தின் முன் வைத்தார்.

கிராம சுயராஜ்ய இயக்கம் ஒரு பக்கம் வளர்ந்து செல்ல மற்றொருபக்கம் பீகார் மக்கள் இயக்கம் நாடு முழுதும் பரவவும், அரசுக்கெதிரான பல்வேறு அரசியல் கட்சிகளின் ஈடுபாடு காரணமாக கட்சி அரசியலை நோக்கி இயக்கம் சென்றுகொண்டிருப்பதாக சிலர் கருதினர். அதன் மத்தியில் சர்வோதய இயக்கமும், ஊழியர்களும் தேர்தலில் ஈடுபடலாமா என்ற பிரச்சினை எழவும், தேர்தலில் ஊழியர்கள் ஈடுபடுவது சங்க அடிப்படைக் கோட்பாடுகளுக்கு முரண்பாடானது என்று கூறி இதுபோன்ற ஊழியர்கள் பதவி விலக்கிவிட்டு தேர்தலிலோ பீகார் இயக்கத்திலோ ஈடுபடவேண்டுமென்று வினோபா ஆலோசனை கூறினார். பின்னர் இதையே மேலும் மென்மையாக்கி ரஜா எடுத்துச் செல்லலாம் என்றும்கூறினார்.

இவ்வாறு தனது கருத்தை வெளியிட்டு வினோபா அடிகள் 1974 டிசம்பர் 25ம்தேதியன்று ஓராண்டுகால மவுன விரதம் மேற்கொண்டார். சொல்லின் ஆற்றல் குன்றும் போது, மவுனத்தின் ஆற்றலின் அடிப்படையில் செயல்பட வேண்டியது அவசியமாகி விடுகிறது. எனவே வினோபாஜின் மவுனம் நாட்டின் உறங்கிக் கிடந்த ஆற்றலை விழித்தெழச் செய்வதற்கான முயற்சியைச் செய்தது. வினோபாஜின் மவுனத்தின்போதே சர்வ சேவா சங்க மாநாடு 1975 மார்ச்சில் நடைபெற்றது. ஆனால் இம்மாநாட்டில் தான் சங்கத்தின் ஒற்றுமைக்கு சோதனை ஏற்பட்டது. பீகார் இயக்க ஊழியர்களும்' இயக்கத்தில் ஈடுபடாத ஊழியர்களும் பதவி விலகல் கடிதங்களைச் சமர்ப்பித்தனர். எனவே மீதமிருந்த வ.ர்கள் வினோபாஜியின் மவுனம் முடிவு பெறும் வரை சங்க நடவடிக்கைகளை நிறுத்தி வைப்பதென்று முடிவு செய்தார்கள்

1975—76 பூதான யக்ஞத்தின் வெள்ளிவிழா ஆண்டு, போராட்டத்தில் ஈடுபடாத ஊழியர்கள் மத்திய பூதான யக்ஞ வெள்ளிவிழாக் குழுவை அமை

( 7 ஆம் பக்கம் பார்க்க )

**★ சோர்வும் வீழ்ச்சியும் தொண்டருக்கில்லை ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வோதயமும் அரசியலும்

## அரசியல் மக்களைப் பிளவுபடுத்துகிறதா?

'அரசியல் மக்களைப் பிளவுபடுத்துகிறது. மக்களைப் பிளவுபடுத்தாத நிர்மாணத் திட்டங்களில், சமூக சேவைகளில் மக்கள் ஈடுபடவேண்டும்' என்பது இன்றைய சர்வோதய வாதிகள் பலரின் கருத்து.

இந்தச் சமூக வேலைத்திட்டங்களும் அரசியல் கலவாத ஆக்கப்பணிகளும் செயல்படுவது எந்தச் சூழலில்?

சுமுகமான ஒரு ஜனநாயக ஆட்சி முறையில், எல்லா நல் இயக்கங்களுக்கும் விட்டுக் கொடுக்கும் ஓர் ஆட்சி நிர்வாகத்தில் மட்டுமே இத்தகைய பொது வேலைகள், சமூக சேவைகள் இடையூறின்றிச் செயல்பட முடியும். ஆனால் இதற்குமாறான தன்னலம் அழுத்தும் சர்வாதிகார ஆட்சிமுறை இடம்பெறும் ஓர் நாட்டில் இத்தகைய வேலைத்திட்டங்களும் ஆக்கப்பணிகளும் செயல்பட இடமளிக்கப்படுமா? இல்லை. காரணம், ஆட்சியில் இருக்கும் சர்வாதிகாரியின் சுய நல நோக்குக்கு இச் செயல் திட்டங்கள் ஒத்துவராவிடில் உடனேயே அவை நசுக்கப்படுகின்றன; நசுக்கப்பட்டுள்ளன. தன்னை அழுத்தும் சர்வாதிகாரப் போக்குக்கு எதிராக இயங்கும் ஆற்றல் கொண்டதால் இத்தகைய செயல் திட்டங்களை அது விரும்புவதில்லை. ஹிட்லரின் நாஸி ஆட்சி அமைப்புள் சமதர்மத்தை நோக்கிய பொதுப்பணி வேலைகளும் திட்டங்களும் செயல்பட முடிந்திருக்குமா? ஆகவே என்ன நடக்கிறது? பொதுப்பணிகளும் நிர்மாண வேலைகளும் ஒரு சுமுகமான அமைப்புக்குள் மட்டுமே இயங்கக் கூடியதாய் உள்ளது. அதற்கு மாறான சூழலில் அவை நசுக்கப்படுவதால் அத்தகைய பொதுப்பணிகளில் ஈடுபடும் சர்வோதயவாதி அச்சந்தர்ப்பங்களில் அரசியலில் ஈடுபடவேண்டியவனாகிறான், இருக்கும் ஆட்சிமுறையை மாற்றி அமைப்பதற்காக அந்தச் சூழலில் அவன் செய்யக்கூடிய அதிசிறந்த பொதுப்பணியும் நிர்மாணவேலையும் நடைமுறையில் இருக்கும் பொதுமைக்கு எதிரான ஆட்சி முறையை மாற்றியமைப்பதே!

அப்படி அவன் மாற்றி அமைக்க முயல்கையில் மக்களிடையே பிளவு ஏற்படுகிறது. மக்கள் இரண்டாகிகட்சிப்படுகின்றனர். ஒரு கட்சி தர்மத்துக்குரியதாகவும் அடுத்தது சுயநலத்தையும் சர்வாதிகாரத்தையும் பேணும் அதர்மத்துக்குரியதாகவும் அமைகிறது. இதுவே சரித்திர நியதி. மகாத்மா காந்தி இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோதும் மக்களிடையே பிளவு இருக்கவே இருந்தது. அதாவது சுதந்திரதாஸர்களுக்கெதிரான ஏகாதிபத்தியவாதிகள் இருக்கவே இருந்தனர். அதற்காக மகாத்மாவின் அரசியல் பிரவேசம் பிழையானதென்றும் மக்களைப் பிளவுபடுத்தியதென்றும் சொல்லமுடியுமா? இல்லை. எந்தச் செயலிலும் இந்தக் கட்சிப் பிரிவும் பிளவும் இருக்கவே செய்யும். அது அரசிலாய் இருந்தாலும் சரி சமூக் ஆக்கப்பணியாய் இருந்தாலும் சரி; ஆனால் அதில் முக்கியமானதும் ஆழ்ந்த உன்கவனிப்புக்கும் உரியது என்னவென்றால் அரசியலிலும் சரி அது அல்லாத ஆக்கப்பணியிலும்சரி ஈடுபடும் சர்வோதயவாதியின் மனதில் இந்தப் பிளவு இருக்கக்கூடாது; அவன் மனம் கட்சி கட்டக்கூடாது. அவனைப் பொறுத்த வரையில் அதர்மப் பக்கம் நிற்கும் எதிரியும் தன் ஆத்மாவே என்ற சமநிலை இருக்கவேண்டும். இதுதான் மக்களைப் பிளவுபடுத்துகிறது என்பதன் உண்மையான அர்த்தம். பிளவுபடாத மனதின் இயக்கம் எந்த வெளிப்பிரிவின் மத்தியிலும் முடிவில் ஒருமையையே நிலைநாட்டிச் செல்லும். இந்தியத் தேர்தல் முடிந்ததுமே தன் பெரும் எதிரியாக இயங்கித் தோற்றுப்போன இந்திராகாந்தியை ஜெ. பி. அவர்கள் சென்று உடனே சந்தித்து உரையாடியது இந்தச் சம நிலைக்கு எடுத்துக்காட்டு. இந்த மனப்பக்குவம் இல்லாதவன் சர்வோதயவாதியுமல்லன் எந்தச் சர்வோதய வேலைக்கும் தகுதியானவனுமல்லன்.

எல்லா இயக்க வேலைகளிலும் எதிர்ப்பும் பிளவும் ஆரம்பத்தில் மட்டுமல்ல முடிவுவரை இருக்கவே இருக்கும். அரசியலைத் துறந்து புத்தர் போதிஞானம் போதிக்கச் சென்றவுடனேயே எல்லா மக்களும் அவரை இருகரம் கூப்பி வரவேற்றுவிடவில்லை. அவரை சமணரும் ஏனைய பிற சமயத்தவரும் எதிர்க்கவே செய்தனர். ஆத்மீகச் செயல்பாட்டிலும் பிளவு இருக்கவே செய்தது. புத்தர் அரசியலைத் துறந்தது ஆட்சி அதிகாரம் மூலம் சேவை செய்ய முடியாது என்பதற்காகவல்ல. எந்தச் சேவை செய்வதற்கும் முதலில் ஆத்ம ஞானம் தேவை என்பதைக் காட்டுவதற்காகவே. பின்னர் புத்தர் பரப்பிய பௌத்தம் இந்திய அரசியல் சூழலையே மாற்றியமைத்தது. அசோகனின் வரலாறு ஓர் உதாரணம்.

சர்வோதய வாதிக்கும் மிக முக்கியமானதும் அடிப்படையான தேவையானதும் ஆத்மஞான எழுச்சியே. சர்வோதயம் என்பது இந்த ஆத்மஞானத்தை சர்வத்திலும் உதயம் பெறச்செய்வதே. இத்தகைய ஆத்ம எழுச்சி பெற்ற சர்வோதயவாதி அரசியலோ ஆக்கப்பணியோ எதிலும் கலந்துகொள்ளலாம். அப்படிக் கலந்து கொள்ளும் போது மக்கள் பிளவு பட்டு நிற்காது, பிளவு பட்டு நின்றாலும் அவன் மனம் பிளவு பட்டுநிற்காது. பிளவுபட்டு நிற்கும் எதிரியையும் முழுமையை நோக்கி ஆற்றுப்படுத்தும் ஆத்ம எழுச்சி அவனிடம் இருக்கும். அதனால்தான் உண்மையான சர்வோதயவாதிக்கு எந்தவிதமான முற்கற்பிதங்களோ மனமுற்சாய்வுகளோ இருக்கக் கூடாது. இறைவனில் சரணடைந்த அவன் அவ்வப்போதைக்கு இறைவன் குரல் எப்படி ஒலிக்கிறதோ அப்படி ஒழுகக் கடமைப்பட்டவன்.

அதனால்தான் இன்று சிலர் சொல்வது போல் சர்வோதயவாதி கட்சிச் சார்பற்ற (non Party Politcs) அரசியலில் ஈடுபடவேண்டும் என்பதும் பிழையான முற்கற்பிதமாகும். இது இறைவன் குரலுக்கு நாங்கள் விதிக்கும் தடையாகும். ஒருவேளை ஒருகட்சி ஒன்றை ஆரம்பித்து நீ அதற்கு தலைமை வகித்து நீயும் தேர்தலிலோ வேறு எந்தவிதப் போட்டிகளிலோ ஈடுபடவேண்டும் என்பது இறைவனின் விருப்பமாகவும் அதுவே அச்சூழலுக்குரிய தர்மமாகவும் சத்திய தந்திரமாகவும் ஒலித்தால் நீ என்ன செய்வாய்? நீயும் நீ சர்வோதய

( 8 ஆம் பக்கம் பார்க்க)

★ கட்சிவெறியிலிருந்து ஜனநாயகத்தைக் காப்போம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயம்

உருத்திரபுரம், [இலங்கை]
தொலை பேசி; 254
(கிளிநொச்சி)
காந்தி ஆண்டு 107
1977 ஏப்ரில் - மே


## சமுதாயம் - சர்வோதயம்

காந்தீய சர்வோதய தத்துவ அடிப்படையில் சமுதாய மாற்றம் செய்ய முடியுமா? என்பது எமது வதுளைக் கருத்தரங்கின் பொருள். சர்வோதயம் என்றால் என்ன? சமுதாயத்தை எப்படி மாற்றவேண்டும் என்ற இரு பிரச்சினைகளையும் நாம் ஆராய்வோமானால் இதற்கு ஓர் சுலபமான விடையைக் காணலாம். சர்வோதயம் என்பது எல்லாரும், (கடையவனும்) கடைத்தேற அந்தோதயம் பெற, எல்லாரும் இன்புற்றிருக்க, உழைத்தல். இங்கு எம் கடன், பணி செய்தல் ஒன்றுதான் பணியின் எல்லை கடைசி ஆளும் கடைத்தேறும் வரை உழைத்தலாம்.

கடைத்தேறல் என்றால் எல்லோரும் சமமாக உண்டு, உடுத்து உறங்கல் மட்டுமல்ல. சமுதாயத்தின் பொதுச் சொத்தினையும் பொதுச் சேவைகளையும் சமமாக நுகர்வதுமல்ல.

மனிதன் உண்டி, உடை உறையுள் மூன்றையும் நுகர்ந்து வளரும் ஒரு பிராணி அல்ல. புசிப்பதால், நுகர்வதால் மட்டும் ஓர் உயிர் மனிதனாகி விடாது. இந்த மூன்றோடும் மனிதன் எனும் உயிர் உழைத்தலும் வேண்டும். மனிதனுடைய உடல், உயிர் வளர்ச்சிக்கு எவ்வாறு உண்டி உறையுள் அவசியமோ அவ்வளவிற்கு உழைப்பும் அவசியம். சமுதாயம் என்பதன் பொருளை இவ்விடத்தில் செவ்வையாக அறிந்து கொள்ளல் நன்று. சமுதாயம் என்பது ஒன்று சேர்ந்து நன்முறையில் முன்னேறலாகும். சர்வோதயம் — சர்வம் உதயம். சமுதாயம் — சம் உத் ஆய. சமுதாயம் என்பதன் பொருளே ஒன்றுபட்டு உழைத்து முன்னேறலாம்.

ஓர் உயிரின் வளர்ச்சிக்கு உணவு எவ்வளவு முக்கிய ஊட்டப் பொருளோ அவ்வளவில் உழைப்பும் முக்கியமானதாம். எனவே பிறர் உழைத்துத்தர அதில் உயிர் வாழ்தல் என்பது எந்த உயிர்க்கும் இயலாததாம். ஆகவே சர்வோதயத்தில் ஈடுபட்டு உழைத்தல் என்பது சமுதாய எழுச்சியே ஆகும். சர்வோதயம் என்பது ஒரு சிலர் உழைக்க மற்றையவர் சும்மா இருந்து நுகர்தல் அன்று. எல்லாரும் தம்மால் இயன்ற அளவு உழைத்து தமக்கு அத்தியாவசியத்தை எடுத்து நுகர்த்தலாம். சர்வோதயம் என்பது எல்லாமக்களினதும் எழுச்சி எனின், உழைப்பினால் தான் எழுச்சி வருமே அன்றி, சோம்பேறியாயிருந்து உண்பதனால் வராது.

சமுதாயம் என்பது மக்களின் எண் தொகையன்று. மக்கள் ஒன்றுபட்டு ஒருவர்க்கு ஒருவர் உழைத்துத் தம்மையும் உயர்த்தலாகும். அந்தக் கருத்திலேயே இந்தச்சொல் உருவாகியது. மக்கள் காலகதியில் சோம்பல் அடைகின்றபொழுது தம்மைத்தாம் உற்சாகப்படுத்துவதற்காகப் புதுப் புதுத் தத்துவங்களையும் சொற்களையும் கண்டு பிடிக்கிறார்கள். சர்வோதயம் என்ற கருத்தினை எல்லோர் மனதிலும் இயங்க வைத்தால் சமுதாயம் தன்பாட்டில் மாற்றமடையும். இயக்கமில்லாத ஆள்வினை இல்லாத மக்கள் கூட்டம் சமுதாயமாகாது. யாதாயினும் ஓர் இலட்சியம் பணி செய்யும் வேட்கை உள் நின்று ஒரு கூட்டத்தினரை இயக்க அக் கூட்டம் சமுதாயமாக உரு மாறும்.

— இ. இ.

## நூல் நயம்

வைகறை
ஆசிரியர் — 'அமுதன்'
வேல் வெளியீடு,
விலை ரூபா 5 . 00

வைகறை, உட்புண், அளவுகோல், ஏனப்பிறப்பு, கண்ணீருக்குப் பின்னால் முதலிய ஐந்து கதைகளின் தொகுப்பான இச் சிறுகதைத் தொகுப்பு வேல் வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாக வெளிவந்துள்ளது.

வைகறைப் பொழுதைக் காணும் மணியம் கைலஞ்சம் வாங்கிய குற்றத்துக்கு சமுதாய அமைப்பைக் குற்றம் காணும் பீற்றா, உள்ளத்தை அல்ல. உத்தியோகத்தைக் காதலிக்கும் [வடிவழகு, நீறு துலங்கும் நெற்றியும் காமம் ததும்பும் உள்ளமுமாக ஒட்டியுறவாடி மங்காவின் கற்பைக் குடித்த உத்திராக்கப் பூனை கோயில் மாமா பேரம்பலம்,, தன் நோய் காரணத்தால் கலியாணம் செய்தும் பிரமச்சாரியாக வாழும் கணவனுக்கு லட்சுமியை துணையாகச் சேர்க்கும் கண்மணி முதலிய பல பாத்திரங்கள் நல்லமுறையில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

பாலுணர்ச்சியும் சொலை, கொள்ளை பயங்கர சம்பவங்களும் நிறைந்த நாவல்கள் புற்றீசல் போல வெளியாகிக் கொண்டிருக்கும் இந் நாளில் வைகறை போன்ற இலட்சிய நூலை வெளியிடும் முயற்சி வர்த்தக நோக்கில் எதிர்பார்க்கும் பயனை அளிக்காவிட்டாலும் இலட்சிய நோக்கில் நல்ல பயனை நல்குமென்பதில் ஐயமில்லை.

ஆற்றொழுக்குப் போன்ற நடை, எடுத்த கருந்தை தொத்குதிருக்கும் உத்தி முதலிய சகல அம்சங்களிலும் சிறந்து விளங்குகிறது இச் சிறு கதைத் தொகுதி.

'நல்லை மன்னன்'


## சர்வோதய பாத்திர அன்பர் மறைவு

வெள்ளவத்தை இராமகிருஷ்ண ரோசைச் சேர்ந்த திரு. A. தவத்துரை அவர்கள் இயற்கை எய்தினார். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

★ சர்வோதய நற் சமுதாயத்தினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜிக்கு மகாத்மா பட்டம் கிடைத்த வரலாறு



காந்திஜிக்கு மகாத்மா என்ற பட்டம் எப்படிக் கிடைத்தது, கொடுத்தவர் யார்? என்பது பற்றி பம்பாய் தொழிலதிபர் மனுமாய் பிமானி பின்வருமாறு அறிவிக்கிறார்.

''மகாத்மா என்ற பட்டம் காந்திஜிக்கு எவ்விதம் கிடைத்தது என்பது பலருக்குத் தெரியாது. தென் ஆபிரிக்காவிலிருந்து காந்திஜி திரும்பியதும் கொண்டால் சமஸ்தானத்திற்குச் சென்றார். தென் ஆபிரிக்காவில் காந்திஜி நடத்திய போராட்டத்துக்கு கொண்டால் மஹாராஜா உதவி அளித்து வந்தார். அதற்காக மஹாராஜாவுக்கு மரியாதை செலுத்தும் பொருட்டு கொண்டால் சமஸ்தானத்துக்குச் சென்றார்.

அங்கு காந்திஜிக்கு பொதுக் கூட்டத்தில் வரவேற்பளிக்கப் பட்டது. 1915 ஜனவரி 27இல் நடைபெற்ற அப்பொதுக் கூட்டத்தில் கொண்டால் சமஸ்தானத்தைச் சேர்ந்த சமஸ்கிருத புலவர் வைத்தியராஜ் ஜீவாராம காளிதாஸ் சாஸ்திரி பல சமஸ்கிருத கவிதைகளை படித்தார். காந்திஜி என்ற பெயருடன் மகாத்மா என்ற அடைமொழியைச் சேர்த்து அக்கவிதைகள் புனையப் பட்டன. அது முதல் மகாத்மா என்ற பெயர் நிலைத்து விட்டது.

# காந்தியின் சிறப்பு

குறைந்த பட்சம் ஒரு கிராமத்தையாவது நீங்கள் சுய தேவைப் பூர்த்தியுள்ளதாகச் செய்வீர்களானால் காந்திஜியின் பெயரும் நிலைத்திருக்கும். உங்கள் பணியும் நிலையாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். நம்முடைய பணிகளின் முடிவான விளைவு பூஜ்யம் தான் என்று காந்திஜி கூறியிருக்கிறார். இந்த உலகில் ஆண்டவன் விரும்புவது தான் நடக்கும். நம்முடைய தொன்றும் செல்லுபடியாகாது. எனினும் உடல் இருப்பதால் அதைக்காப்பாற்ற உண்ண வேண்டியிருக்கிறது. எனவே கொஞ்சம் சேவை செய்து விட வேண்டும். வேறு நம்மால் ஆகக்கூடியதொன்றுமில்லை. எனவே காந்திஜி சுடப்பட்டபோது அவர் ''ஹே இந்தியாவே'' என்று கூறவில்லை 'ஹே ராம' என்று கூறினார். துளசி தாசர் ஜன்மம் ஜன்மமாக முனிவர்கள் ஓயாமல் ஆண்டவன் நாமத்தை உச்சரிக்க முயன்று கொண்டிருந்தாலும் உயிர் பிரியும் போது ராமர் பெயரை உச்சரிக்காமல் மறந்து விடுகின்றதென்று கூறியிருக்கின்றார். ஆனால் காந்திஜியோ தனது உயிர் பிரியும் போதும் ராமர் பெயரை உச்சரித்தார். இது தான் காந்திஜீயின் சிறப்பு!

— வினோபா

# மில்க்வைற் தொழில் அதிபரின் சர்வோதயப் பணி

மில்க்வைற் தொழில் அதிபர் ''சிவநெறிப் புரவலர்'' க.கனகராசா அவர்கள் நிறைவேற்றியுள்ள சர்வோதயப் பணிகள்.

- பத்து லட்சத்துக்கு அதிகமான பனம் விதைகள் வரண்ட பகுதிகளில் நாட்டப்பெற்றன.
- பல்லாயிரக் கணக்கான பயன் தரும் மரங்கள் வீடுகள், கோயில்கள், பாடசாலைகள், பொதுவிடங்கள் தோறும் நாட்டப் பெற்றன.
- அதிக உணவுப் பயிர்களை உற்பத்தி யாக்க வீடுகள் தோறும் விதைகள், கன்றுகள், நாற்றுக்கள் கொடுக்கப்பெற்றன.
- நீரைத் தேக்கி நிலத்தை வளஞ் செய்வதற்கு ஊர்கள் தோறும் குளங்கள் துப்புரவாக்கப் பெற்றன.
- நல்வாழ்வுக்கான துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள் செய்தி இதழ்கள் வெளியிடப் பெற்றன.

# ஜனநாயகக் குடியரசு

மக்களிடையே குழப்பமில்லை. அரசியல் வாதிகளிடையேதான் குழப்பங்கள் இருக்கின்றன. இதனால்தான் காந்திஜி 'அரசியலிருந்து விடுதலை பெற கட்சிகளைக் கலைத்து சமூக சேவைக்கு வரவேண்டும்' என்று கூறினார். எல்லோருடைய நலனில் தான் தனிப்பட்டவரின் நலன் அமைந்திருக்கிறது. கிராமசுயராஜ்யத்தில் கிராமத்தின் சுய தேவை பூர்த்தி செய்யப்படும். உழைப்பிற்கேற்ற ஊதியம் கொடுக்கப்படும். கிராமத்திலுள்ள நிலங்கள் சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்படும். தனிமனிதனின் ஆதிக்கம் எந்த இடத்திலும் நிலைநாட்டப்படாது. மாணவர்கள் சம்பளத்திற்காகப் படிக்காமல் அறிவிற்காகப் படிப்பார்கள். அவர்களுடைய அறிவு நாட்டின் பொருளாதாரம், விவசாயத்திற்குப் பயன் படும். கிராம உடைமைகள் மக்களுக்கு உடைமையாக்கப்படும். சுரண்டலற்ற-வர்க்க பேதமில்லாத கிராமக் கைத்தொழில் நிறைந்த ஜனநாயக குடியரசே கிராமராஜ்யமாகும்.

# ஒரு பேராசிரியரின் குறிப்பு

மதுரையை விட்டுச் சென்னைக்குப் போகுமுன் சர்வோதய இலக்கியப் பண்ணை என்னும் புத்தகசாலைக்கும் வெளியீட்டகத்துக்கும் நண்பர் ச. ஜெயப்பிரகாசத்துடன் சென்றேன். நண்பர் ச. ஜெயப்பிரகாசம் பண்டை வரலாற்று விரிவுரையாளர்; காந்திய இலட்சியங்களின் வழி ஒழுகுபவர். ஆயினும் மார்க்ஸியத்தை மதிப்பவர் சர்வோதய இலக்கியப் பண்ணையை அவரும் வேறு சிலரும் சமூக சேவையாகவே கருதிப் பணிபுரிந்து வருவதைப் பார்க்க மகிழ்ச்சியாயிருந்தது. ஊதியமின்றி மாலை வேளைகளில் அந்நிறுவனத்திலே தொண்டாற்றும் சில இலட்சியவாதிகளின் வேகத்தையும் நேசபாசத்தையும் நேரிற் பார்த்தபோது, அவர்களைப் போற்றாமல் இருக்க முடியவில்லை. தரமான-ஆரோக்கியமான நூல்களை வெளியிட வேண்டும் என்ற அவாவினால் உந்தப்பெற்று உழைத்து வரும் அவர்களின் முயற்சியால் சில நல்ல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. புத்தகக்கடையாகவும் எழுத்தாளர் கூடமிடமாகவும் விளங்கும் அப்பண்ணையில் சிறிது நேரத்தைப் பயனுள்ள முறையில் கழித்தோம். இரண்டொரு அருமையான நூல்களையும் வாங்கிக்கொண்டோம்.

— க. கைலாசபதி

'சந்திப்புக்களும் சர்ச்சைகளும்' என்னும் கட்டுரையிலிருந்து

ஆதாரம்: மல்லிகை

**நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம் ★**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வதுளையில் நடைபெறும்

# சர்வோதய கருத்தரங்கம்

வதுளை மாவட்டத்தில் நடைபெறும் கருத்தரங்கிற்கு மூன்று தொண்டர்களுடன் வருகிறேன்.

நாட்டின் பெரிய புள்ளிகளைத் தலைவர் என்ற ஸ்தானத்தில் அமர்த்துவதனால் சர்வோதய தத்துவத்தை மக்களிடையே பரப்ப முடியாது. விளம்பரத்திற்காக செயல்படுகின்ற சுயநல விரும்பிகளை அகற்றி, மக்கள் மனதில் நிலைபெற்றுள்ள, சுறு சுறுப்புடன் செயலாற்றக் கூடிய இன்றைய இளம் தலைமுறையினரைத் தெரிவு செய்தால் இளம் தலைமுறையினருக்கு ஊக்கமளிப்பதோடு அவர்களை திருந்தி நடப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும்.

மட்டக்களப்பு அ. செல்வேந்திரன்

★ ★ ★ ★

கடந்த எல்லா கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டிருக்கிறேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்புற்று விளங்கின. வதுளைக் கருத்தரங்கும் சிறப்புடன் விளங்கும் என்பதில் நம்பிக்கை உண்டு. சர்வோதயப் பணிகள் மலை நாட்டுப் பகுதிகளிலும் பின் தங்கிய கிராமப் பகுதிகளிலுமே நடைபெறவேண்டும்.

மானிப்பாய் ஆ. விஜயகமூர்த்தி

★ ★ ★ ★

வதுளையில் நடைபெறும் சர்வோதயக் கருத்தரங்கிற்கு திரு. எம். பி வடிவேலு, திரு. ஏ. வீரமுத்து ஆகிய அன்பர்களுடன் சமூகமளிக்கிறேன்.

தொழிளாளர் தேசிய சங்கம்
அக்கரப்பத்தனை. பி. தேவராஜ்


★ ★ ★ ★

உலகப் பெருங் காட்டில் திக்குத் திசை தெரியாமல் அலையும் மனித சமுதாயத்திற்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்வது சர்வோதய தத்துவமாகும். மாவட்டங்கள் தோறும் சர்வோதய கருத்தரங்கு நடைபெறுவது குறித்து மகிழ்ச்சியடைவதுடன் என்னாலான உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

அகில இலங்கை காந்தி சேவா
சங்கம்-கிளை க. பாரதிதாசன்
மட்டக்களப்பு செயலாளர்

★ ★ ★ ★

# முழுமைப் புரட்சி



முழுமைப் புரட்சி என்னும் எண்ணக் கருத்தைச் சமீபத்தில் மக்களிடை நிலை நாட்டியவர் ஜயப்பிரகாஷ் நாராயணன் அவர்களே. மூன்று ஆண்டுகட்கு முன்னர் நேர்மையும் அரசுமுறையும் தவறிக்கெட்டு நின்ற அரசாட்சிக்கெதிராக மக்கள் சக்தியைத் திரட்டி, நல் வழியில் செலுத்தமுன் வந்தவர் இவர்: எந்த ஒரு தனி மனிதனாலும், சர்வாதிகாரியே ஆயினும் சாந்த சொரூபனான மகாத்மாவே ஆயினும் தனித்து நின்று ஊழலை முற்று முழுதாக மாற்ற இயலாது என்பதை நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். ஊழல் ஒவ்வொரு மனிதனதும் சுயநலத்திலும் போட்டி பொறாமை உணர்ச்சியிலும் இருந்தே எழுகின்றது. இதனால் தான் புரட்சி முழுமை அடையவேண்டுமெனில் மனிதனின் சமுதாய அமைப்புமட்டுமன்றி தனிமனிதனின் மன அமைப்பும் மன இயக்கமும் மாற்றமடைய வேண்டும் என்று அவர் கருதினார்.

இந்தக் கருத்தின் அடிப்படையிலேயே ட்ரொட்ஸ்கி நிரந்தரப் புரட்சி என்றதோர் கருத்தினை சமூக மாற்றத்தில் கொண்டுவர எண்ணினார். மாசேதுங் சில ஆண்டுகளுக்கொருமுறை கலாச்சாரப் புரட்சியைப் புகுத்த முனைந்தார். ஆயினும் ஜயப்பிரகாஷ், மகாத்மா காந்தியின் அடியை ஒற்றி, மிகக் கீழ்மட்டத்திலிருந்தே மனிதனை மனதிலும், தனித்தனி உறவிலும், பொருளாதார தொடர்பிலும், சமூக நிறுவனங்களின் அமைப்பில் கலந்து ஆட்சி செய்வதிலும் புரட்சியைப் புகுத்த முனைந்தார். சமுதாயத்தின் மேல்மட்டத்திலிருந்து இம்சையால், படையினரால், சட்டத்தால், பொலிசால் ஒரு சமுதாய அமைப்பை மக்கள் மீது சுமத்துவதிலும் பார்க்க, மனிதர் ஒவ்வொருவரும் தாமே தம்மைத் திருத்தி, சமுதாய அமைப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, நேரடிப் பங்கு கொண்டு அரசினை ஆட்சி முறையில், நீதித்துறையில், பொருளாதார வளர்ச்சி நிறைவில் ஊக்கும்முறையே முழுமைப் புரட்சியாகும்.

எக் கட்சி எந் நாட்டை ஆளினும் ஒவ்வொரு மனிதனதும் செயற்பாடு அன்றுடைய அரசு இயக்கத்தில் பிரதிபலிக்கா விட்டால், அவ்வரசு மக்களரசு ஆகாது. அவ்வாறு பிரதிபலிக்கச் செய்வதே முழுமைப் புரட்சி.

## கவிதைப் போட்டி

'காந்தீயம்' பத்திரிகையில் மாதந்தோறும் கவிதைப் போட்டி நடாத்துவதென்று தீர்மானித்துள்ளோம். மகாத்மா காந்தியின் தத்துவங்களான, உண்மை, அகிம்சை, சர்வோதயம், ஆகியவற்றை அடிப்படையாக வைத்து 12 வரிக்குக் குறையாமல் 20 வரிக்கு மேற்படாமல் கவிதைகள் அமைய வேண்டும். உயர் சிந்தனை, செவ்விய மொழி, செப்பும் திறன், புதுமைக் கருத்து ஆகியவை கவிதையின் பண்புகளாக அமைய வேண்டும். கவிதை பாக்கள், பாவினங்கள், புதுக்கவிதை எவ்வரிசையிலும் அடங்கலாம். பாவாண்மைதான் சிறப்பு. சிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்படும் கவிதைக்கு ரூபா 15 பரிசாகக் கொடுக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி,
காந்தியக் கவிதைப் போட்டி:
18, ஆதர் இடம்
கொழும்பு - 4

★ அன்பின்மூலம் மனமாற்றத்தை ஏற்படுத்தமுடியும் ★

# ஜனநாயகத்தைப்..

( முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாபஸ் பெற்றதில்தான் அவரது ஆற்றலே இருந்தது. எந்த விஷயத்தை வேண்டுமானாலும் பிரசாரம் செய்வதெவ்வாறு என்பதை அவர் அறிந்திருந்தார். அதேபோன்று அதை நிறுத்தும் ஆற்றலும் அவர் பெற்றிருந்தார். ஆனால் இன்றைய தலைவர்களால் எதையும் தொடங்கிப் பரப்பி விடமுடியும். ஆனால் அதை ஒரு முறை பரப்பி விட்டபின்னர் அதிலேயே சிக்கிக் கொண்டு விடுகிறார்கள். அதிலிருந்து எவ்வாறு விடுதலை பெறுவதென்பது அவர்களுக்குத் தெரியாது. இது தலைவருக்குரிய இலக்கணமல்ல. காந்திஜியிடம் தலைவருக்குரிய அம்சங்கள் இருந்தன.

ருக் வேதத்தில் ஒரு வர்ணனை வருகிறது. சூரியன் காலையில் தனது கிரணங்களைப் பரப்புகிறான். மாலையில் ஒரேயடியாக எல்லாவற்றையும் இழுத்துக்கொள்கிறான். ''தத் சூர்யஸ்ய தேவத்வம் தத் மஹிதவம், மத்யாகர்த: ஜிததம் ஸஞ்சமாய'' சூரியனின் தெய்வீகத் தன்மையும், மகிமையும் அவன் தனது கிரண ஜாலங்களை ஒரேயடியாக நாற்புறமும் பரப்பி விட்டு மாலையில் எல்லாவற்றையும் சுருட்டிக் கொள்ளும் ஆற்றலில்தான் இருக்கிறது. சூரியனிடம் இருக்கும் இரட்டை ஆற்றல்தான் தலைவருக்குரிய இலக்கணம். இதுபோன்ற தலைமை இன்று நாட்டில் இல்லை. நாட்டில் மக்கள் அபிமானத் தலைவர்கள் எத்தனையோபேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களின் மேலேயிருந்து கீழே வரையும் நாற்புறமும் கட்டுப்பட்டுள்ளார்கள்.

இன்றைய யுகத்தில் மிகவும் அவசியமான தேவை சிறப்புகளை நிர்ணயிக்கும் ஆற்றல்தான் என்று நான் கூற விரும்புகிறேன். இதுபோன்ற சிறப்புகளுள்ளவர் தேர்தலில் வெற்றிபெறமுடியாது என்பது உறுதி. இக்காலத்தில் ஏதாவது நிர்ணயம் செய்யவேண்டுமானால் மனத்தால் உயரவேண்டும். இதுபோன்ற ஆற்றல் உள்ளவர்கள்தான் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இது நடைபெற முடியாவிட்டால் மாற்றுவழி என்ன என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். எனக்கு ஒரு வழி தோன்றுகிறது. அது சரி என்று தோன்றினால் நீங்களும் ஏற்கலாம்.

எங்கு பெரிய பிரச்சினைகள் இல்லையோ அங்குசிறியபிரச்சினைகளை எடுத்துக் கொண்டு அதற்குத் தீர்வுகாண மக்களிடம் நிர்ணயம் செய்யும் ஆற்றல் இருக்க வேண்டும். எனவே கிராமசுயராஜ்யத்தை ஏற்படுத்த வேண்டும். தில்லியில் இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் கிராமங்களிலும் தோன்றும். அவற்றை நமது நிர்ணயஆற்றல் மூலம், நாமே தீர்க்க முடியுமாயின், மக்கள் கிராமங்களின் நடைமுறை விஷயங்களைப் பற்றி சண்டு சிந்தித்து ஆராய்ந்து, திட்டமிட்டு செயல்படுத்த முடியுமாயின் கிராமந்தோறும் நிர்ணயிக்கும் ஆற்றல் உருப்பெறும். சிறு சிறு பிரச்சனைகளில் இந்த ஆற்றல் உருப்பெறுமானால், காலஞ் செல்லச் செல்ல பெரிய பெரிய பிரச்சனைகளைப் பற்றியும் சரியான முடிவு எடுக்கும் ஆற்றல் மூலம் தீர்வுகாணமுடிம். இதற்கு உண்மையான மக்களாட்சியைக் கொண்டு வரவேண்டும். அரசு இயந்திரம் முழுவதையும் பரவல்முறைப்படுத்த வேண்டும். கிராமந்தோறும் மக்கள் தங்களது வேலைகளை சுயமுடிவு ஆற்றல் மூலம் செய்துவரமுடியுமானால் அதைத்தான் சர்வோதய திட்டம் என்று நான் கூறுவேன்.

( எஸ் . பீ . எஸ்)

---

# குருக்ஷேத்ரம் ....

( 2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

த்து ஐந்து ஆற்றல்களின் ஒத்துழைப்புடன் நிலம் அற்றவர்களுக்கு நில விநியோகம் செய்யும் பணியை மேற்கொண்டனர் 1976 ஏப்ரல் 13 முதல் 18 வரை நாடளாவிய நிலையில் பாதயாத்திரைகள் மேற்கொள்ளப்பட்டன.

வினோபாஜியின் மவுனவிரதத்தை 1975 டிசம்பர் 25-ஆம் தேதியன்று முடித்தார். பூதான வெள்ளி விழா மாநாட்டில் பேசிய போது ஓராண்டுக்குள் நிலவினியோகப் பணியை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். 1976 ஜனவரியில் நாட்டு நிலைமை பற்றி ஆராய்ந்து அரசுக்கு ஆலோசனை தெரிவிப்பதற்காக வினோபாஜியின் முன்னிலையில் ஆசாரியர்கள் மாநாடு நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அறிஞர்கள் நெருக்கடி நிலைமையை முடி நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்து தேர்தல்களை கூடிய விரைவில் நடத்த ஏற்பாடு செய்வதன் மூலம் ஜனநாயக ஆட்சி அமைப்பை மீண்டும் கொண்டு வருமாறு அரசுக்கு ஆலோசனை கூறியது.

1976-இன் மிகப்பெரிய நிகழ்ச்சி பசுவதையைத் தடை செய்யக் கோரி வினோபாஜி உண்ணா நோன்பு இருக்கப் போவதாக அறிவித்ததுதான். பசுவதைப் பிரச்னையில் இவ்வளவு தீவிரமாக இருந்திராவிடில் இவ்வளவு விரைவில் இப்பிரச்னைக்குச் சுமுகமான தீர்வு ஏற்பட்டிருக்காது.

சென்ற ஜூன் மாதத்தில் பவனாரில் மீண்டும் சர்வ சேவா சங்க மாநாடு நடைபெற்றது, இதில் சர்வ சேவா சங்கத்தைக் கலைத்து விடுமாறு வினோபாஜி ஆலோசனை கூறினார். இது பற்றி பின்னர் முடிவு செய்யலாம் என்று முடிவு செய்யப்பட்டது. பூதான யக்ஞ வெள்ளி விழாப் பணிகள் முடிவுற்று விட்டதால் அக்குழுவைக் கலைத்து விடலாம் என்று ஆலோசனை கூறப் பட்டது. வினோபாஜியின் சமிக்ஞையை புரிந்து கொண்டு ஆகஸ்டு 9ஆம் தேதி மதுராவில் பூதான யக்ஞ வெள்ளி விழாக் குழு கலைக்கப் பட்டது. இவ்வாறு மத்திய நிறுவன அமைப்புகளிலிருந்து விடுபடுவதற்கான தொடக்கத்தை ஆரம்பித்து வைத்தார் வினோபாஜி.

ஆனால் போராட்ட் எதிர்ப்பார்களில் சிலர் மத்திய அமைப்பு ஒன்று அவசியம் எனக்கருதி ' அகில இந்திய சர்வோதய பரிசெத்' என்ற அமைப்பை உருவாக்கினர். சர்வோதய சமுதாயத்தின் அடிப்படையே சத்தியம், அகிம்சை, சாதனத்தின் (வழிமுறை) தூய்மைதான் எனவே இந்த அடிப்படைதத்துவங்களை ஒப்புக் கொள்பவர்கள் குறைந்தபட்சம் ஆண்டுக் கொருமுறையாவது சந்தித்து, தங்களுடைய அனுபவங்களை அன்புடன் பரிமாறிக்கொண்டு அதன் அடிப்படையில் தங்கள் பகுதிகளில் பணிசெய்து வர வேண்டுமென்பது ஏற்றுக் கொள்ளப் பட்ட கொள்கையாகும் எனவேதான் பவனார் சம்மேளனத்திற்கு 'பரஸ்பர அன்பு செய்யுங்கள், என்ற கோஷத்தை வினோபாஜி அளித்தார். இந்தக் கோஷத்தின் அடிப்படையில்தான் பவனாரின் நாடெங்கிலுமிருந்து சுமார் 2000 சர்வோதய ஊழியர்கள் ஒன்று கூடி தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டனர். குருக்ஷேத்திரலிருந்து பவனார்வரையான யாத்திரை மகாபாரதக் கதையைப் போன்று பல மர்மங்களைக் கொண்டது என்பதில் ஐயமில்லை!

★ புதிய சமுதாயம் அமைக்க முன்வாரீர்! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னொரு காலத்தில்

முன்னொரு காலத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் அரசை வெகுகவனமாக ஆண்டு வந்தான். இருந்தும் அதனாலேயே அவன் களைத்து விட்டான். பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாமல் திணறும் போது, ஏன் அரசனாக பிறந்தோம் என்று அவனுக்கு இருக்கும்.

ஒரு நாள், ஊருக்கு வெளியே ஒரு சிறு குடிசை கட்டிக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த தன் குருவைத் தேடி வந்தான். அரசன் அவர் பொன்னடிகளில் விழுந்து வணங்கி, ''குருவே! என்னால் இந்த அரசு பாரத்தைத் தாங்க முடியவில்லை. அதில் உள்ள பிரச்சனையைக்கண்டு என் தலை சுற்றுகிறது. இந்த அரசை விட்டொழித்து, உங்களை போல நிம்மதியாக ஒரு குடிசை கட்டி கொண்டு வாழமாட்டோமோ என்றிருக்கிறது'' என்று சொன்னான்.

அதற்குக் குரு, '' ராஜ்ய பாரத்தை உன்னால் தாங்க முடியவில்லையென்றால், அதை விட்டு விட்டு வந்து விடுவது தானே!'' என்று கேட்டார்.

அதற்கு அரசன், அரசை எப்படி சடாரென்று விடமுடியும்? என் பிள்ளை இன்றும் சிறுவனாகத்தான் இருக்கிறான். அதோடு அரசாங்கத்தில் தீர்க்க வேண்டிய எத்தனையோ பிரச்சனைகள் உள்ளன என்றான்

அப்படியானால் ஒன்று செய். அரசாங்கத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டு நீ உன் இஷ்டம் போல எங்கு வேண்டுமானாலும் போ'' என்றார்.

''சரியென்று அரசன் அரசை குருவுக்குத் தாரை வார்த்துக் கொடுத்தான், சரி நீ இப்பொழுது என்ன செய்யப்போகிறாய்!'' என்று குரு அரசனைக் கேட்டார்.

கஜானாவிலிருந்து பணம் எடுத்துக் கொண்டுபோய், ஏதாவது வியாபாரம் செய்து பிழைத்துக் கொள்வேன்'' என்று அரசன் சொன்னான்.

'' அரசு தான் எனக்குச் சொந்தமாகிவிட்டதே! நீ எப்படி பணம் எடுத்துக்கொள்ள முடியும்!'' என்று கேட்டார் குரு.

''மன்னிக்கவேண்டும், மறந்து விட்டேன். நான் எங்கேயாவது வேலை செய்து பிழைத்துக்கொள்வேன்,'' என்றான் அரசன்.

'' அப்படியானால் ஒன்று செய். என்னிடமோ இத்தனை பெரிய ராஜ்யம் இருக்கிறது. இதைக் கவனித்துக் கொள்ள எனக்கு ஒரு நல்ல ஆள் வேண்டும். உனக்கு நான் மாதச் சம்பளம் கொடுக்கிறேன். இதை ஆளும் பொறுப்பை நீ ஏற்றுக்கொள், '' என்றார்.

சரியென்று அரசன், உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டு, அரசை ஆளத் தொடங்கினான். குருவும் கஜானாவிலிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை அவனுக்கு சம்பளமாக அனுப்பிக் கொண்டிருந்தார்.

நான்கு மாதங்கள் கழிந்த பிறகு ஒரு நாள் குரு அரசனை பார்க்க வந்தார்.

''உன் புது உத்தியோகம் எப்படி இருக்கிறது!'' என்று கேட்டார்.

'' எனக்கு உத்தியோகம் மிகவும் பிடித்திருக்கிறது. நான் இப்பொழுதெல்லாம் நிம்மதியாகத் தூங்குகிறேன். மிகவும் உற்சாகமாக வேலையைச் செய்கிறேன் என்றான்.

அதற்குக் குரு. '' முன்பு செய்து கொண்டிருந்த வேலையைத்தான் இப்பொழுதும் செய்து கொண்டிருக்கிறாய். ஆனால் முன்பு அரசு உன்னுடையது என்று நினைத்துக் கொண்டு அல்லல் பட்டாய். இப்பொழுது அரசு உன்னுடையது அல்ல என்று நினைத்துக் கொண்டு நிம்மதியாக இருக்கிறாய்! எதையும் நம்முடையது என்று நினைக்கும் மமகாரம் ஏற்படும் பொழுதுதான் தொல்லையென்பதை நினைவு கூர் '' என்றார்.

— நாடோடி

## '' காந்தீயம் ''

### சந்தா விபரம்

| | |
|---|---|
| தனிப்பிரதி | 25 சதம் |
| அரை ஆண்டு | 2 00 |
| ஓர் ஆண்டு | 4 00 |

விபரங்களுக்கு
காந்தி நிலையம்
உருத்திரபுரம்.

# அன்பர் தபால்

'காந்தீயம்' இதழ் கண்டேன்; படித்தேன். கடுகாயிருப்பினும் கருத்தால் பரந்துள்ளது.

யாழ்ப்பாணம் புதுமைலோலன்

★ ★ ★ ★ ★

'காந்தீயம்' மார்ச் இதழ் கண்டு உவகை கொண்டேன். ஜனநாயகமும் அகிம்சையும் என்னும் கட்டுரை காந்திய திட்டத்தை பிரதிபலிக்கின்றது. சீராக மாதத்தில் முற்பகுதியில் கிடைக்கச் செய்ய முடியுமாயின் நன்று. வாரப் பத்திரிகையாக வெளியிடப்படும் திட்டம் வரவேற்கப்படும்.

பண்டத்தரிப்பு சாந்தையூர் சக்திவேல்

## வரப்பெற்றோம்

புதிய உலகம்
(சிந்தனையூட்டும் சஞ்சிகை)
ஆசிரியர்: கரவையூர் செல்வம்
சமூகத் தொடர்பு நிலையம்
45, கின்ஸிசாலை
கொழும்பு. 8

★ ★ ★ ★

இனமுரசு
ஆசிரியர்: மாந்தையூர் தாஸ்
பெரிய நாவற்குளம்
திருக்கேதீஸ்வரம்

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாதி பற்றித் தரித்துக் கொண்ட முற்கற்பிதமும் என்னவாகும்?

ஆகவே உண்மையான சர்வோதயவாதி ஓர் பூரண யோகி. அவன் எந்த முற்கற்பிதங்களையும் தரியாது சதா இறைவன் ஆக்ஞைக்கு விட்டுக் கொடுத்துக் காத்திருப்பான். அதைத் தான் காந்தி செய்தார்.

இடையனாய், சேவகனாய், மந்திரியாய், தோழனாய்-எந்தவித பாத்திரத்தையும் ஏற்றுச் செயற்படக் காத்திருக்கும் தன்னிழப்பின் சுயசரிதை அவன்.

இ. பொன்னம்பலம்
புங்குடுதீவு-9

இப் பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் இ.க. வேலாயுதபிள்ளை அவர்களால் இரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்பு — குமரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
Registered at the G. p .o as a Newspaper in Sri lanka